**புதுச்சேரி அரசு**
**அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல் துறை**
**புதுச்சேரி மாசு கட்டுப்பாட்டு குழுமம்**
**3-வது தளம், புதுச்சேரி வீட்டு வசதி வாரிய வளாகம், அண்ணாநகர், புதுச்சேரி -5.**
**தொலைபேசி: 0413-2201256 தொலைநகல்: 0413-2203494**

***

## பொதுமக்கள் கருத்துக்கேட்புக் கூட்டம் - அறிவிப்பு

புதுச்சேரி உழவர்கரை நகராட்சி, பெரிய காலாப்பட்டு, மாத்தூர் ரோடு, R.S. No. 33 & 34 அமைந்துள்ள M/s. ஸ்ட்ரெயிட்ஸ் ஷாசுன் லிமிட்டெட், மொத்த மருந்துகள் உற்பத்தி நிலையத்தின் உற்பத்தியை வருடத்திற்கு 4800 டன்னிலிருந்து 9156 டன்னிற்கு உயர்த்த திட்டமிட்டுள்ளது. புது டெல்லியில் அமைந்துள்ள இந்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட சுற்றுச்சூழல் தாக்கம் மதிப்பீடு அறிவிப்பு எண். S.O. 1533 தேதி 14.9.2006 படி, திட்ட உரிமையாளர் சுற்றுச்சூழல் சான்றிதழ் பெற சம்மந்தப்பட்ட துறையிடம் விண்ணப்பித்துள்ளார். சுற்றுச்சூழல் சான்றிதழ் வழங்கும் செயல்முறையின் ஒருபகுதியாக, உள்ளூர் மக்களின் கருத்துக்களை அறிந்து கொள்ள பின்வரும் விவரத்தின் படி பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது:

| வ.எண் | தொழிற்சாலையின் பெயர் மற்றும் முகவரி | திட்டவிவரம் | கருத்துக் கேட்பு கூட்டத்தின் தேதிமற்றும் நேரம் | இடம் |
|---|---|---|---|---|
| 1 | M/s.ஸ்ட்ரெயிட்ஸ் ஷாசுன் லிமிட்டெட் நிறுவனம், R.S. No. 33 & 34, மாத்தூர் ரோடு, பெரிய காலாப்பட்டு, உழவர்கரை நகராட்சி, புதுச்சேரி. | மொத்த மருந்துகள் உற்பத்தி நிலையத்தின் உற்பத்தியை வருடத்திற்கு 4800 டன்னிலிருந்து 9156 டன்னிற்கு உயர்த்துதல் | 08.05.2018 காலை 10.00 மணி | தவமணி கல்யாண மண்டபம், கிழக்கு கடற்கரை சாலை, பெரியகாலாப்பட்டு, புதுச்சேரி– 605014. |

திட்ட உரிமையாளரால் சமர்ப்பிக்கப்பட்ட சுற்றுச்சூழல் தாக்கம் மதிப்பீடு சாராம்சு அறிக்கை மற்றும் வரைவு சுற்றுச்சூழல் தாக்கம் மதிப்பீடு அறிக்கையின் நகல்கள் கீழ்கண்ட

அலுவலகங்களில் கிடைக்கும், இதனை அனைத்து அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்:

1. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, புதுச்சேரி.
2. உள்ளாட்சி துறை, புதுச்சேரி.
3. மாவட்ட தொழில் மையம், தட்டாஞ்சாவடி, புதுச்சேரி.
4. உழவர்கரை நகராட்சி, புதுச்சேரி.
5. சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகத்தின் மண்டல அலுவலகம், சென்னை.
6. புதுச்சேரி மாசு கட்டுபாட்டு குழுமம், 3-வது தளம், புதுச்சேரி வீட்டு வசதி வாரிய வளாகம், அண்ணாநகர், புதுச்சேரி- 5.

திட்ட உரிமையாளரால் சமர்ப்பிக்கப்பட்ட சுற்றுச்சூழல் தாக்கம் மதிப்பீடு சாராம்ச அறிக்கை மற்றும் வரைவு சுற்றுச்சூழல் தாக்கம் மதிப்பீடு அறிக்கையின் நகல்கள் புதுச்சேரி மாசுக் கட்டுபாட்டு குழுமத்தின் https://dste.py.gov.in/Public_Hearing_ppcc.htm. என்ற இணைய தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தை பற்றிய கருத்துக்களை சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் மேற்குறிப்பிட்ட புதுச்சேரி மாசு கட்டுபாட்டு குழும முகவரிக்கு எழுத்து மூலமாக அனுப்பிவைக்கலாம் அல்லது கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துக்களை தெரிவிக்கலாம்.

**(ஸ்மிதா. R)**
**உறுப்பினர் செயலர்**
**புதுச்சேரி மாசு கட்டுபாட்டு குழுமம்**